நிபந்தனைகளுக்குட்பட்டு இல்லாமல் இருக்குமானால், அவற்றின்மீது உரிய நடவடிக்கை எடுத்து, அந்த ஆலைகளை மூடி, இயங்காமல் செய்வதற்கான பணிகளை எல்லாம் இந்த அரசு செய்து கொண்டு வருகிறது. ஆகவே, உறுப்பினர் குறிப்பிடுகிற அந்த ஆலையின்மீது புகார் வருமேயானால், உரிய நட்டவடிக்கையை அரசு எடுக்கும். இல்லையென்றால், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் எடுத்துச் சொல்லி, அந்த ஆலையை நாளைக்கே சென்று பார்த்து, உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். *331,* திரு. வி. ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண். *332,* திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

332—

தொட்டியம் தொகுதியில் நூற்பாலை அமைத்தல்

36619—**திரு என். ஆர். சிவபதி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொட்டியம் தொகுதி, தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் ஒரு நூற்பு ஆலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10–45

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். தாத்தையங்கார்பேட்டையில் நெசவாளர்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றார்கள். மேலும் அவர்களில் பெரும்பாலோர் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இப்பகுதியில் நெசவுக்குத் தேவையான நூல், பாகு மற்றும் மூலப் பொருட்கள் கிடைக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து மீண்டும்

1995 ஏப்ரல் 18]

தொட்டியம் தொகுதியில் தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் ஒரு நூற்பாலை அமைக்கும் திட்டத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்கின்ற காரணத்தினாலேதான் அவர்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிகளில் ஏறக்குறைய 18 கூட்டுறவு நூற்பாலைகளை அரசு உருவாக்கியது. இன்றைக்கு அந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளும் ஏறக்குறைய 132 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டு இருக்கிற காரணத்தினால் புதிய நூற்பாலைகளை தமிழகத்திலே எங்கேயும் துவக்குகின்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை. இந்த 18 நூற்பாலைகளை மறு ஆய்வு செய்து, அதை நஷ்டம் இல்லாமல், லாபத்திலே இயக்கக்கூடிய வகையிலே அரசு அந்த நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிற காரணத்தினால் புதிய நூற்பாலையை அரசு எங்கும் துவங்காது.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைத் திரும்பக் கேட்பதற்குக் காரணம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆலைகள் 132 கோடி நஷ்டத்திலே இயங்குவதாக சொல்கிறார்கள். அதுபற்றி என்ன என்று தெரியவில்லை. இருந்தாலும், அந்தப் பகுதியில் அதிகமான நெசவாளர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருவதோடு மட்டுமல்லாமல் அதிகமான கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களும் இருக்கின்றன. அவற்றில் ஒரு சில சங்கங்களில் உற்பத்தியாகின்ற துணிகள் ஐ.எஸ்.ஐ. அங்கீகாரம் பெற்றுள்ளது. அந்த அளவிற்கு தகுதிவாய்ந்த நெசவாளர்கள் கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் இயங்கி வருகின்றன. ஆகவே, இந்த நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற காலத்திலேயாவது, வருகின்ற நிதியாண்டிலாவது, ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு நெசவாளர்களின் முன்னேற்றத்தினை, அவர்களின் நலனை கருதி, நூற்பாலைகளை அமைக்கும் திட்டத்தை அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் ஏதாவது அறிவிக்க இருப்பாரேயானால், அதில் தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் இந்த நூற்பாலையை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 18 நூற்பாலைகளும் நெசவாளர்களுக்காக உருவாக்கப்பட்ட நூற்பாலைகள்தான். இந்த 18 நூற்பாலைகளும் இன்றைக்கு 132 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்குகின்றன என்று நான் தெரிவித்தேன். திருச்சி மாவட்டத்திலே இருக்கிற நூற்பாலை மட்டும் 6 கோடியே 70 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் நஷ்டத்திலே இன்றைக்கு இயங்கிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, புதிய நூற்பாலை உருவாக்க வேண்டும் என்றால், இருக்கிற நூற்பாலைகளைச் சரி செய்தால்தான், அதனுடைய நஷ்டத்தைப் போக்கி லாபத்திலே கொண்டுவந்தால்தான், புதிய நூற்பாலையை உருவாக்க முடியும். அப்படி நஷ்டம் இல்லாமல், லாபத்திலே அதை இயக்கக்கூடிய காலம் வருமானால், அப்போது தாத்தையங்கார்பேட்டையில் நூற்பாலை உருவாக்குவதைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 333, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

333—

பத்திரிகை விளம்பரச் செலவு

*40045—**திரு சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகை விளம்பரத்திற்கு என 1993-ல் தமிழக அரசு எவ்வளவு செலவிட்டுள்ளது?

(ஆ) செலவைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1993-94 ஆம் ஆண்டில் செய்தி மக்கள் தொடர்புத் துறை செய்தி விளம்பரச் செலவு ரூ. 123.36 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) அரசின் பல்வேறு நலத் திட்டங்கள், சாதனைகள், விழாக்கள் பற்றி மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. எந்த அரசிலும் இல்லாத வகையில் நலத் திட்டங்களும், அரசு விழாக்களும் நடத்தி செயல்படும் அரசாக